

**Sakthi Foundation**

**Uni5 education - Important questions about life**

***ஸ்ரீமத் ஆதிசங்கரருக்கும் அவர் தன் மாணவர்களுக்கும் இடையில் காசியில் மக்கள் முன் ஏற்பட்ட எளிய ஆனால் ஆழ்ந்த சத்சங்கத்தில் உருவான வாழ்வியல் பற்றிய கேள்விகளுக்கு, ஆச்சாரியரின் பதில்கள் உள்ளன.16வயதுக்கு உட்பட்ட மாணவர்களைக் கருத்தில் கொண்டு தேர்ந்து எடுக்கப்பட்ட கேள்விகள் இப்பகுதியில் உள்ளன.இதை வெளியிட அருளிய காஞ்சி ஸ்ரீமஹாபெரியவாளின் ஆசீர்வாதத்தை நன்றியுடன் நினைவு கொள்கிறோம்! 2014 வினாயகர் சதுர்த்தி அன்று இப்பகுதி செய்யப்பட்டது.***

## மூல நூல்: ஸ்ரீ ப்ரச்னோத்தர ரத்ன மாலிகா

1. யார் சிறந்த ஆசிரியர்?
உண்மையை அறிந்தவர்.தன் மாணவர்களின் முன்னேற்றத்துக்காக உழைப்பவர்.

Who is respected as a good teacher?
A true teacher must be very clear with the truth of concepts and dedicate for the better transformation of his students.

2. எதை க்ரஹித்துக் கொள்ள வேண்டும்?
ஆசிரியரின் வார்த்தைகள்

What has to be grasped by a student?
Teachers' words.



3. எது சுத்தம்?
மனதைத் தீய எண்ணங்கள் இல்லாமல் வைப்பதே சுத்தம்.

What is hygiene?

Cleansing of mind without evil thoughts.

4. யார் அறிஞன்?
மிக்க விவேகத்துடன் நல்லது கெட்டதைப் பிரித்துப் பார்த்துச் செயல்படுபவனே அறிஞன்.

Who is a scholar?

One who can think good and bad is a scholar.

***Above: Shankara mut in Varansi***

5. எது மிகக் கொடிய விஷம்?
நல்லவர்களின் வார்த்தைகளை அலட்சியம் செய்வதே விஷம்.

Which is a horrible poison?

Neglecting wise people's advice.

6. மனிதர்கள் எப்படி வாழ வேண்டும்?
தனது, பிறரது முன்னேற்றத்திற்காக வாழ வேண்டும்.

How a man should live?

He must dedicate and work for his selftual and social development.

7. மதுவை விடக் கொடியது எது?
அளவுக்கு அதிகமான பேராசை, பற்று.

Which is worse than liquor?

Attachment with desire.

8. மனிதனின் முதல் முக்கியமான எதிரி?
சோம்பேறித்தனம்

Who can be the worst enemy for man?

Laziness

9. உண்மையான வீரன் யார்?

எந்த வேளையிலும் எதன் பொருட்டும் தீய வழியில் செல்லாதவனே வீரன்.

Who is the real brave man?

One who never enters into the evil path of life at any context for any reason is the best brave man.

10. மிகக் கொடிய வறுமை எது?

எதிலும் திருப்தி இல்லாத குணம்.

Which is the worst poverty?

Mind without contentment.

11. உலகில் மூன்று நிலையில்லாத விஷயங்கள் எவை?

இளமை, செல்வம், ஆயுள்

List out three important aspects of life which are not permanent:

Youth, wealth and life span

12. நிலாவின் குளிர்ச்சிக்கு நிகரானது எது?

நல்லவர்களின் நட்பு.

Which is equal to the radiations of a moon?

Association of good people.

13. எது உண்மையில் நரகம்?

வாழ்க்கை முழுவதும் பிறரைச் சார்ந்து வாழ்வது.

Which is the real hell?

Always depending upon others for survival is the worst hell.

14. எது மனிதனுக்கு உண்மையான சாதனை?

அனைத்து உயிர்களுக்கும் நன்மை செய்தல்.

What is the real achievement for a man?

To do good for all beings.

15. எது மிகக் கொடிய வ்யாதி?
ஆணவம்

Which is the most horrible illness?

Self-ego

16. எது உண்மையான சுகம் தரும்?
நல்லவர்களுடன் ஏற்படும் பேச்சும் பழக்கமும்.

Which is the real happiness?

Conversation with good people.

17. மனதில் கவலையே இல்லாதவன் யார்?
எதையும் விட்டுக்கொடுக்கும் குணம் கொண்டவனுக்கு மனதில் கவலையே இல்லை.

Who can live without worries?

One who can give up all the needs.

18. எதை மாற்றவே முடியாது?
இறப்பு

Which cannot be changed?

Death

19. சாவை விடக் கொடியது எது?
முட்டாள் தனம்

Which is worse than death?

Foolishness

20. விலை மதிப்பே செய்ய முடியாதது எது?
சரியான வேளையில் செய்த உதவி

Which cannot be valued with price?
Help at right time.

21. எதற்காக பெருமுயற்சி செய்ய வேண்டும்?
கற்றதைத் தெளிவாகப் புரிந்து கொள்ள, மருந்து உட்கொள்ள, தானம் செய்ய பெருமுயற்சி செய்தல் வேண்டும்.

What has to be practiced?
Selftualizing the Concepts, to follow doctor's instructions in taking medicine and offering charity to poors.

22. எதைக் கண்டு கொள்ளவே கூடாது?
கெட்ட குணம் உள்ளவர்கள், பிறர் பொருள்

Which has to be neglected?
Evil mined people and others' materials.

23. எதை மிக்க ஈடுபாட்டுடன் செய்ய வேண்டும்?
மிகவும் உடலாலோ மனதாலோ பணத்தாலோ அறிவாலோ பலவீனமானவர்களிடம் அன்பு காட்டுதலும், உண்மையான சாதுக்களையும் துறவிகளை மதிப்பதிலும் ஈடுபாடு அதிகம் காட்ட வேண்டும்.

Which has to be relished while performing?
Compassion to weak people and respect to wise men and true monks.

24. யாரைத் திருத்துவது மிக மிகக் கஷ்டம்?
எப்போதும் எதிலும் சந்தேகம் கொள்பவன், அழுமூஞ்சி, நன்றியை மறந்தவர்கள் மற்றும் எந்த தீய காரியத்தையும் செய்யத் துணிந்தவர்களை எப்போதும் மாற்றவே இயலாது.

Who cannot be transformed?
One who forgets the gratitude, one who always cry, one who always have suspesion upon others and one who is dare to perform any evil action cannot be transformed.

25. சாதுவான மனிதன் யார்?
மனதில் அமைதியும் செயலில் நிதானமும் உள்ளவன் சாது.

Who is a saadhu?

One who is calm and peace in mind and performs all actions with happiness is a saadhu.

26. யார் அதர்மன்?

தீய ஒழுக்கம் உடையவனே அதர்மன்.

Who is against dharma?

One who follows unacceptable qualities is against adharma.

27. அனைவரின் அன்பையும் மதிப்பையும் எப்படிப் பெற முடியும்?

தூய அன்பும் பொறுமையும் உண்மையும் இருந்தால் அனைவரின் அன்பையும் மதிப்பையும் பெற்றுவிட முடியும்.

How can we make everyone to love and respect us?

True compassion, patience and truth within us will make every one to show love and respect.

28. யாரை இறைவன் விரும்புவான்?

அனைத்து உயிர்களிடமும் தூய கருணை உடையவனை இறைவன் விரும்புவான்.

Who is being loved by God?

God loves a man who shows true compassion with kindness to all beings.

29. மக்களை எப்படி நம் வசப்படுத்த முடியும்?

உண்மையான அன்பும் நல்ல பேச்சும் மக்களை வசப்படுத்தும்.

How can you attract people?

People will be attracted to us by showing true compassion with good words.

30. யார் குருடன்?

படித்தும் கெட்ட காரியம் செய்பவனே குருடன்.

Who is a blind person?

A man who is bad in actions even though he is highly educated is a real blind.

31. யார் செவிடன்?

பிறர் கூறும் நல்ல வார்த்தைகளைக் கேட்காதவனே செவிடன்.

Who is deaf?

One who does not like and listen to good words of others is really deaf.

32. யார் ஊமை?

சரியான தருணத்தில் நல்ல வார்த்தைகள் பேசாதவனே ஊமை.

Who is dumb?

A man who fails to talk good words at right context is dumb.

33. தானம் என்பது எது?

கேட்காமலே உதவி செய்வதே தானம்.

What is charity?

Help before asking.

34. யார் உண்மையான நண்பன்?

பாவச் செயல்கள் செய்வதைத் தடுப்பவனே உண்மையான நண்பன் ஆவான்.

Who is a real friend?

One who stops a man from performing sins is a real friend.

35. மனிதனுக்கு எது அழகு?

நற்செயல்கள் மூலம் கிடைக்கும் புகழ்.

Which adds beauty to man?

Fame through good actions.

36. பேச்சுக்கு அழகு எது?

உண்மை

Which is beauty to our speech?

Truth

37. மின்னலைப் போல் நிலை இல்லாதது எது?

தீய நட்பு.

Which is unstable like lightening?

Association of bad friends.

38. எது மிக மிகப் பரிதாபத்துக்கு உரியது?

கருமித்தனம் [யாருக்கும் உபயோகம் இல்லாத தன்மை]

Which has to be seen with pity?

Miser nature of man which is useless.

39. யாருக்குத் தீமை இல்லை?

பெரியோர் வகுத்த பாதையில் வாழ்பவனுக்குத் தீமை இல்லை.

Who will never face troubles?

One who follows the path of wise men can never be troubled.

40. செல்வம் யாருக்கு நிலைத்து நிற்கும்?

ஒழுக்கமும் நேர்மையும் உள்ளவனிடன் செல்வம் எப்போதும் இருக்கும்.

How can you retain your wealth?

We can retain our wealth thorough our discipline and path of dharma.

41. எங்கு வாழ விரும்ப வேண்டும்?

நல்லவர்களின் அருகில் வாழ விரும்புங்கள்.

Where to live?

Near good people.

42. உலகில் மிகக் கொடிய பாவி யார்?

கருமி

Who’s the real man with great sin?

Miser.

43. எது கேவலமான செயல்?

கெட்டவர்களிடம் உதவி கேட்டல்.

Which is very nasty?

Asking help from bad people is very nasty.

44. இரவும் பகலும் எதைச் செய்ய வேண்டும்?
ஒவ்வொரு செயலிலும் இறைவனை த்யானிக்க வேண்டும்.

What has to be done through the day and night?

Try to think about divinity in all your actions.

45. கண்கள் இருந்தும் குருடர்கள் யார்?
உண்மையை உணராத நாஸ்திகர்கள்.

Who are blind with good eyes?

Atheist who refuses to accept the truth.

46. யார் உண்மையில் நொண்டி?
வயதான காலத்தில் ஸ்தல யாத்திரை செய்பவன்.

Who is really lame?

One who likes to visit temples at old age.

47. எது கங்கை?
மனதில் உள்ள தீய எண்ணங்களை அகற்றும் பயிற்சியே கங்கை.

Which is a real Ganga?

Selftual exercises which helps us to purify our mind is real Ganga.

48. எது நல்ல புத்தி?
பிறர் குற்றம் கூறாமை, பொய் பேசாமை

Which is good intellect?

Do not find mistake with others and talk lies.

49. மனிதன் எவற்றை எல்லாம் சம்பாதிக்க முயற்சிக்க வேண்டும்?

கல்வி, பொருள், வலிமை, புகழ், புண்யம்

Which has to be earned through hard efforts?
Education, wealth, fame, health and punya

50. எல்லாவித நல்ல குணங்களையும் அழிக்கும் சக்தி எது?
கருமித்தனம்

Which bad quality spoils all our great qualities?
Miserliness.

51. கற்பகக் கொடி என்பது எது?
ஆசிரியர்களே கற்பகக்கொடி

Which is the real desire tree?
Teachers

52. அனைவருக்கு அம்மா யார்?
பசு

Who is the mother to all people?
Cow

53. எது நமது படை?
தைர்யம்

Which is our real army?
Mental strength with awareness.

54. எது எமன்?
கவனம் இல்லாமல் செய்யும் காரியம்

Which is Yama?
Carelessness

55. சுகத்துக்குக் காரணம் எது?

புண்ய காரியங்கள்

Which is the source of pleasure?

Good actions of previous birth

56. துக்கத்துக்குக் காரணம் எது?

பாவ காரியங்கள்

Which is the source of worries?

sins

57. யாருக்குத் தோல்வி வரும்?

ஆணவம் உள்ளவனுக்கு எப்போதும் தோல்வி வரும்.

Who will be always defeated?

One who holds the self - ego is always defeated.

58. பொய் பேசலாமா?

தர்மத்தைக் காக்கப் பொய் பேசலாம்.

Can we tell lie?

To protect dharma we can lie.

59. யாரை மதிக்க வேண்டும்?

படித்தும் கர்வம் இல்லாமல் வாழ்பவனை மதிக்க வேண்டும்.

Who has to be respected well?

Highly educated man without self-ego has to be highly respected.

60. எது தெய்வம்?

நமது தன்னலமற்ற நற்காரியங்கள்

What is God?

Our selfless good actions

